மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 26 செவ்வாய்க்கிழமை 11.07.2023 கதிர் 24

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

# முல்லைத்தீவு நீதிமன்றத்தின் முன்பாக மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம்!

## சட்டத்தரணிகளால் முன்னெடுப்பு





இலங்கை நாடாளுமன்றில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, தமிழ் நீதிபதிகள் தொடர்பாகத் தெரிவித்த கருத்தினைக் கண்டித்து முல்லைத்தீவு நீதிமன்றம் முன்பாக கண்டணப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டச் சட்டத்தரணிகளோடு வடக்கு மாகாணத்தின் சில மாவட்டங்களைச் சேர்ந்த சட்டத்தரணிகளும், கிழக்கு மாகாணச் சட்டத்தரணிகளும் இணைந்து இன்றைய தினம் காலை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் முன்பாக இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது, நாடாளுமன்றச் சிறப்புரிமையைத் துஷ்பிரயோகம் செய்யாதே, நீதித்துறை சுதந்திரம் ஓங்குக, நீதிபதிகளின் கடமைகளில் தலையிடாதே, நீதித்துறையின் சுயாதீன செயற்பாட்டுக்கு தடையேற்படுத்தாதே, நீதிக்கே சோதனையா? இது அரசியல் சார்பு வேதனையா?,

2 ▶

# சரத் வீரசேகரவின் வில்லங்கப் பேச்சுக்கு எதிராக கல்முனை சட்டத்தரணிகளும் பணிப் புறக்கணிப்பு

நீதிமன்றப் பணிப்புறக்கணிப்பில் கல்முனை சட்டத்தரணிகள் சங்கமும் இன்று ஈடுபட்டது.

அம்பாறை மாவட்டம், கல்முனை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் எம். ஐ.றைசுல் ஹாதி தலைமையில் ஒன்றுகூடிய சட்டத்தரணிகள், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவின் உரைக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். அத்துடன் பல்வேறு வாசகங்கள் எழுதிய சுலோக அட்டைகளையும் அவர்கள் ஏந்தியிருந்தனர்.

அனைத்து நீதிமன்ற நடவடிக்கைகளையும் கல்முனை சட்டத்தரணிகள் சங்கம் இன்று புறக்கணித்திருந்தது.



# யாழ் மாவட்ட சட்டத்தரணிகளும் இன்று தமது பணிகளைப் புறக்கணித்தனர்

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தமிழ் நீதிபதிகள் தொடர்பாகத் தெரிவித்த கருத்தினைக் கண்டித்து யாழ்ப்பாண மாவட்டத்திலும் சட்டத்தரணிகள் இன்றையதினம் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டனர்.

யாழ் மாவட்ட சட்டத்தரணிகள் நீதிமன்ற நடவடிக்கைகளில் பங்கேற்காது இருக்க தீர்மானித்ததாக யாழ்ப்பாண மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் பா.தவபாலன் தெரிவித்தார்.

சரத் வீரசேகரவின் கருத்திற்கு

2 ▶

# இறுதிப் போர் சாட்சியங்களில் ஒன்றான நந்திக்கடல் இனி சுற்றுலாத்தலமாகும்

## அரச வேலைத்திட்டம் விரைவில்



இலங்கையில் இறுதிக்கட்டப் போர் நடைபெற்ற, பல்லாயிரம் மக்களைப் படுகொலை செய்த, தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் உடலை மீட்டதாக அரசு அறிவித்த - நந்திக்கடல் பகுதியைச் சுற்றுலாத்தலமாக மாற்றுவதற்கான வேலைத்திட்டம் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளது.

2 ▶

# ஜனாதிபதிக்கு எதிராக குற்றப்பிரேரணை கொண்டுவரலாம் - சுனில் வட்டகல தகவல்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராகக் குற்றப் பிரேரணையைக் கொண்டு வந்து, அவரைப் பதவிநீக்க முடியும் என தேசிய மக்கள் சக்தியின் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல் விடயத்தில் பணமில்லை, என அரசாங்கம் கூறுவது பொய் எனத் தெரிவித்துள்ள அவர், அந்தக் காரணத்தை அடிப்படையாகக் கொண்டு ஜனாதிபதி மீது

2 ▶

# இலங்கைக்கான புதிய ஐ.நா வதிவிட ஒருங்கிணைப்பாளர் நியமனம்

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டெரெஸ், இலங்கையில் ஐக்கிய நாடுகளின் வதிவிட ஒருங்கிணைப்பாளராகக் கனடாவைச் சேர்ந்த மார்க் அண்ட்ரே பிராஞ்சே என்பவரை நியமித்துள்ளார். ஜூலை 8 ஆம் திகதி அவர் தனது அலுவலகத்தில் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

24 ஆண்டுகளுக்கும் மேலாக

2 ▶



# ஒன்றரைக் கோடி ரூபாவை முதல் கட்ட இழப்பீடாகச் செலுத்திய மைத்திரிபால



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு கோடி 50 இலட்சம் ரூபாவை முதல் கட்ட இழப்பீடாகச் செலுத்தியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலைத் தடுக்க தவறியதன் ஊடாக அடிப்படை மனித உரிமை மீறப்பட்டமையால் 10 கோடி ரூபா நட்டஈடு வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது. குறித்த உத்தரவுக்கு அமைய, அவர் முதல் கட்டமாக ஒரு கோடி 50 இலட்சம் ரூபாவைச் செலுத்தியுள்ளார்.

2 ▶

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்

## 1987 இல் இராணுவத்தால் விரட்டப்பட்ட அம்பாறை கனகர் கிராம மக்களை மீள் குடியேற்றும் நடவடிக்கை ஆரம்பம்



(நூருல் ஹுதா உமர்)

1987 ஆம் ஆண்டு யுத்தத்தின் போது இராணுவத்தினரால் அம்பாறை கனகர் கிராமத்தில் உள்ள 500 ஏக்கர் நிலப்பரப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட, போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான புனர்வாழ்வு வேலைத்திட்டத்தை அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கை இன்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின்வழிகாட்டுதலின் பேரில், அந்த நிலப்பரப்பில் மக்களை மீள்குடியேற்றம் செய்வதற்கான நடவடிக்கையின் முதல் கட்டமாக, சுத்திகரிப்பு வேலைத்திட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் அவர்களின் கோரிக்கையின் பேரில் உள்ளாட்சி அமைப்புகளின் ஆதரவுடன் நடைபெற்றது.

## லங்கா சதொச நிறுவனக் கட்டமைப்பு மறுசீரமைக்க அமைச்சரவை ஒப்புதல்




நாட்டின் அரசுக்குச் சொந்தமான மிகப் பெரிய சில்லறை வலையமைப்புக் கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தை (சதொச) மறுகட்டமைக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

வர்த்தகம், வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ சமர்ப்பித்த யோசனைக்கு, நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில், லங்கா சதொச எதிர்பார்த்த பெறுபேறுகளை அடையவில்லை அல்லது நாட்டின் பொருளாதாரத்திற்கு வினைத்திறனான பங்களிப்பை வழங்கவில்லை என்பதை அவதானித்ததன் காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, சில்லறை வலையமைப்பு கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தின் மறுசீரமைப்பைக் கண்காணிக்கவும், சீராகச் செயல்படுத்துவதை உறுதிப்படுத்தவும் குழுவொன்று நியமிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.




## ஒன்றரைக் கோடி ரூபாவை முதல் கட்ட ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைத்திரிபால சிறிசேன தனது சட்டத்தரணிகள் ஊடாக உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த பிரேரணையில் இந்த விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி என்ற ரீதியில் மாதாந்தம் 97 ஆயிரத்து 500 ரூபா ஓய்வூதியம் பெறுவதாகவும், நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் 54 ஆயிரத்து 285 ரூபாவை மாதாந்தம் பெறுவதாகவும் அந்தப் பிரேரணையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, உயர் நீதிமன்றம் உத்தரவிட்ட 10 கோடி ரூபா இழப்பீட்டுத் தொகையில், ஒரு கோடி 50 இலட்சம் ரூபாவை உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிதியத்துக்கு வழங்கியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

எஞ்சியுள்ள தொகையை 2024 ஆம் ஆண்டு ஜுன் 30 முதல் 2033 ஆம் ஆண்டு ஜுன் 30 வரை 10 தவணைகளில் வருடாந்தம் 85 இலட்சம் ரூபா வீதம் செலுத்த அனுமதிக்குமாறும் முன்னாள் ஜனாதிபதி தனது பிரேரணையில் கோரிக்கை விடுத்துள்ளார்.

## ஜனாதிபதிக்கு எதிராக குற்றப்பிரேரணை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றப்பிரேரணையைக் கொண்டுவர முடியும் எனவும் அதற்கான ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாகவும் கூறியிருக்கிறார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு உண்மையில் ஏழு பில்லியன் ரூபாவே தேவைப்படுவதாகவும், திறைசேரிச் செயலாளரிடம் ஆவணம் ஒன்றைப் பெற்றுக்கொண்டதாகவும், அதன்படி கடந்த பெப்ரவரி மாதம் வரை 6000 கோடி ரூபாய் மேலதிக வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளதாகவும் சுனில் வட்டகல குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கைக்கான புதிய ஐ.நா வதிவிட ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய நாடுகள் சபையில் பணியாற்றியுள்ள பிராஞ்ச், இலங்கையில் ஐக்கிய நாடுகளின் வதிவிட ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்படுவதற்கு முன்னர், லிபியாவில் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டத்தின் வதிவிடப் பிரதிநிதியாகக் கடமையாற்றியுள்ளார்.

2016 மற்றும் 2021 க்கு இடையில், அரசியல் மற்றும் அமைதியைக் கட்டியெழுப்பும் விவகாரங்களுக்கான ஐ.நா. அலுவலகங்களில், உலகளவில் 50க்கும் மேற்பட்ட நாடுகளில் பணிகளில் அவர் ஈடுபட்டுள்ளார்.

2013 முதல் 2016 வரை பாகிஸ்தானில் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் இயக்குநராகவும் அவர் இருந்துள்ளார்.

## இறுதிப் போர் சாட்சியங்களில் ஒன்றான .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் கரையோரப் பகுதிகளில் உள்ள கவர்ச்சியான இடங்களைக் கண்டறிந்து, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய வகையில் அவற்றை சுற்றுலாத் தலங்களாக மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்படி, கரையோரப் பகுதிகளில் 24 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுள் நந்திக்கடல் கடற்பகுதியும் உள்ளடங்கியுள்ளது. உப்புவெளி, சாம்பல்தீவு, நாயாறு ஆகிய கடற்கரைப் பகுதிகளும் இவற்றுள் உள்ளடங்குகின்றன.

## யாழ் மாவட்ட சட்டத்தரணிகளும் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்ப்புத் தெரிவித்து இன்றையதினம் முல்லைத்தீவு நீதிமன்ற முன்றலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்டனப் பேரணியில் தமது சங்கத்தின் உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள் என யாழ்ப்பாண மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் தெரிவித்திருந்தார்.

## முல்லைத்தீவு நீதிமன்றத்தின் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தையும் ஒழுங்கையும் மதித்து நட போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளைத் தாங்கியவாறு சட்டத்தரணிகள் போராட்டத்தை நடத்தியிருந்தனர்.

முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற இடங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான சட்டத்தரணிகள் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு, குருந்தூர் மலைப் பிரதேசத்தின் களநிலவரங்களை ஆராய்வதற்காக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா பயணம் மேற்கொண்டிருந்த போது, அங்கு பிரசன்னமாகியிருந்த சரத் வீரசேகர கருத்துத்தெரிவிக்க முற்பட்ட வேளையில், நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய கருத்துக்களை அந்த இடத்தில் பிரஸ்தாபிப்பதற்கு நீதிபதி அனுமதி மறுத்திருந்தார்.

அதனையடுத்து கடந்த ஏழாம் திகதி சரத் வீரசேகர நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போது, தமிழ் நீதிபதிகள் தொடர்பில் சர்ச்சைக்குரிய கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.

அதனைக் கண்டிக்கும் வகையிலேயே இன்றைய தினம் முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தினர் உட்பட வடக்கு கிழக்கு மாகாணச் சட்டத்தரணிகள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதோடு, முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றையும் நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# இந்தோனேசியாவுடன் வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம்

இந்தோனேசியாவுடன், முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவையின் வாராந்த முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு, இன்று அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றபோது தகவல் வெளியிட்ட அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்தன, இந்தோனேசியாவுடன் முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ள செய்தியைத் தெரிவித்தார்.

கிழக்காசியாவில் பாரிய பொருளாதாரத்தைக் கொண்டுள்ள இந்தோனிசியா, இலங்கைக்கு நன்மையளிக்கும் வகையில் வர்த்தகத் தொடர்புகளைக் கட்டியெழுப்புவதற்குப் பொருத்தமான ஆற்றல் வளத்துடன் கூடிய வர்த்தகப் பங்காளராக, அடையாளங் காணப்பட்டுள்ளது.

அதற்கமைய, நீண்டகாலத்திற்கு அந்த நாட்டுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை மேற்கொள்ளும் நோக்கில், அதன் ஆரம்பப் படிமுறையாக முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையை



மேற்கொள்வதற்கான கலந்துரையாடலை ஆரம்பிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# மன்னம்பிட்டி பஸ் விபத்து சாரதிக்கு விளக்கமறியல்

பொலனறுவை - மன்னம்பிட்டி பகுதியில் விபத்துக்குள்ளான பஸ்ஸைச் செலுத்திய சாரதி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று பொலனறுவை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இதன்போது, அவரை எதிர்வரும் 24ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்தக் கோர விபத்தில் சிறுவன் ஒருவன், பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் மற்றும் பெண்கள் எண்மர் உட்பட 11 பேர் உயிரிழந்திருந்தனர். விபத்தில் காயமடைந்த 41 பேர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# மாணவர்களுக்கு வட்டியில்லாக் கடன் திட்டத்திற்கு அமைச்சரவை அனுமதி!



தனியார் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான வட்டியில்லா மாணவர் கடன் திட்டத்தின் கீழ் ஏழாவது குழுவை இணைத்துக் கொள்ள கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கிகள் முழுமையான கடன் காலப் பகுதிக்கான 13 வீத குறைந்த வட்டி வீதத்தைப் பேணி, இக்கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், பட்டப்படிப்பை மேற்கொள்வதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களில் பொருத்தமான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்களுக்கு இந்தக் கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# அஸ்வெசும நலன்புரி மேன்முறையீடு மதிப்பீடுகள் விரைவில் ஆரம்பமாகும்



'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்திற்காக கிடைக்கப்பெற்ற மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பில், மாவட்டச் செயலாளர்கள் மதிப்பீடு செய்ய ஆரம்பிப்பார்கள், என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

உதவி தேவைப்படும் அனைத்து தகுதியான நபர்களும் 'அஸ்வெசும'வில் சேர்க்கப்படுவதை அரசாங்கம் உறுதி செய்யும் என அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.



# ஐஸ்லாந்தின் தலைநகர் அருகே வெடித்த எரிமலை மக்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேற்றம்

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ஐஸ்லாந்தின் தலைநகர் ரெய்ட் ஜோக்கின் அருகே எரிமலை ஒன்று வெடித்திருக்கிறது. நெருப்புக் குழம்பைக் கொப்பளித்து வரும் இந்த எரிமலை, எந்த நேரத்திலும் பயங்கரமாக வெடித்துச் சிதறலாம் என அஞ்சப்படுகிறது.

ஐரோப்பாக் கண்டத்தில் சுறுசுறுப்பான அல்லது கண் விழித்திருக்கும் எரிமலைகளை அதிகம் கொண்ட நாடுகளில் ஒன்று ஐஸ்லாந்து ஆகும். இந்த நாட்டின் தென்மேற்குப் பகுதியில் உள்ள ரெக் ஜீன்ஸ் தீபகற்பத்தின் மலைக் பகுதியின் மேல் உள்ள சமதளத்தில் பர்க்காதல்ஸ் பயல் என்ற இந்த எரிமலை வெடித்துள்ளது.

தலைநகரில் இருந்து வெறும் 30 கிலோ மீற்றர் தூரத்தில் எரிமலை வெடித்துள்ளதால் மலைப் பகுதிக்கு அருகில் வாழும் மக்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

கடந்த 4 நாட்களில் ஐஸ்லாந்தின் ரெக் ஜீன்ஸ் தீபகற்பத்தில் 4,700 முறை நில அதிர்வு ஏற்பட்டதாக அந்த நாட்டு நிலநடுக்க ஆய்வு மையம் கூறியுள்ளது. எரிமலை வெடிக்க வாய்ப்பு இருப்பதாக முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது பர்க்காதல்ஸ் பயல் என்ற எரிமலை வெடித்துச் சிதறியுள்ளது.

ஐஸ்லாந்தில் இந்த எரிமலை வெடிப்பு தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக ஏற்பட்டிருப்பது ஐரோப்பாவின் மொத்தக் கவனத்தையும் ஈர்த்துள்ளது.





## நைஜீரியப் பேருந்து விபத்தில் 20 பேர் பலி

நைஜீரியாவின் தென்மேற்கு மாகாணத்தின் லாகோஸ் - படக்ரி தேசிய நெடுஞ்சாலையில் பயணிகள் பேருந்து ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

அந்தப் பேருந்து மோவோ நகர் அருகே சென்ற போது, முன்னால் சென்ற மணல் லொறியைக் கடக்க முயன்ற நிலையில், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து லொறி மீது மோதியுள்ளது.

இந்தக் கோர விபத்தில் பேருந்தில் பயணித்த 20 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாகவும் ஏனையோர் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## நேட்டோ உச்சி மாநாடு இன்று ஆரம்பமாகியது



லித்துவேனியாவின் தலைநகரான வில்னிசில் இரண்டு நாள் நேட்டோ உச்சி மாநாடு இன்று ஆரம்பமாகியுள்ளது.

இதில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் உள்ளிட்ட உலக நாடுகளின் தலைவர்கள் பலர் கலந்துகொண்டுள்ளனர்.

எதிர்காலத்தில் உக்ரைனை நேட்டோவில் இணைப்பது பற்றி இக்கூட்டத்தில் முக்கிய முடிவு எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 31 நேட்டோ உறுப்பு நாடுகளும் உக்ரைனுக்கு தங்கள் ஆதரவை வழங்கவுள்ளன.


ரஷ்யாவுடனான யுத்தம் முடிவுற்றதும் நேட்டோவில் உக்ரைன் இணையலாம் என்ற அறிவிப்பை எதிர்பார்ப்பதாக உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், சுவீடனையும் நேட்டோவில் இணைப்பதற்கு துருக்கி தனது ஆதரவை வெளியிட்டுள்ளது.

நீண்டகாலமாகவே குர்தீஷ் பயங்கரவாதிகளை ஆதரிப்பதாக்க் கூறி, நேட்டோவில் இணைய விடாமல் சுவீடனுக்கு துருக்கி ஆதரவு வழங்கவில்லை.

ஆயினும், துருக்கியின் பாதுகாப்பு குறித்து தொடர்ந்து நடந்த பேச்சுவார்த்தைகளை அடுத்து சுவீடனை ஆதரிக்க துருக்கி முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவில் செயற்கை நுண்ணறிவு செய்தி வாசிப்பாளர் அறிமுகம்



இந்தியாவின் ஒடிசாவில் “ஏஐ” தொழில்நுட்பம் மூலம் செயற்கை நுண்ணறிவு கொண்ட செய்தி வாசிப்பாளரை தனியார் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று உருவாக்கியுள்ளது.

அந்த ஏஐ தொழிநுட்ப செய்தி வாசிப்பாளருக்கு பெண்ணுக்கு “லீசா” எனப் பெயரிட்டுள்ளனர். அந்தப் பெண்ணால், ஆங்கிலம் மற்றும் ஒடிசா மொழிகளில் செய்திகளை வாசிக்கமுடிகிறது.

அந்த செய்தி வாசிப்பாளரை சமூக ஊடகங்களிலும் பின்தொடரலாம் என குறித்த செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது.

## அட்லாண்டிக் பெருங்கடலில் 6.6 ரிச்டர் நிலநடுக்கம் பதிவு

வடக்கு கரீபியன் அருகே அட்லாண்டிக் பெருங்கடலில், நேற்று திங்கட்கிழமை 6.6 ரிச்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதனால், அப்பகுதிக்கருகில் உள்ள நிலப்பரப்புகளில் சில கட்டிடங்களில் சிறிய அசைவுகள் இனங்காணப்பட்டன.

இந்த நிலநடுக்கம் 10 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்டதாக அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அன்டிகுவா மற்றும் பார்டோஸிற்கு வடகிழக்கே சுமார் 270 கிலோமீற்றர் தொலைவில் இது நிகழ்ந்துள்ளது.

புவர்ட்டோரிக்கோ உட்பட பல தீவுகளில் நிலநடுக்கம் உணரப்பட்டதாகவும், உடனடியான சேதம் எதுவும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காதலிக்கு 100 மில்லியன் யூரோ சொத்து இத்தாலிய முன்னாள் பிரதமரின் உயில்!



கடந்த மாதம் உயிரிழந்த இத்தாலியின் முன்னாள் பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனி தனது 33 வயதான காதலிக்கு 100 மில்லியன் யூரோக்கள் மதிப்புள்ள சொத்தை உயிலெழுதி வைத்துள்ளார்.

இத்தாலியின் பிரதமராக 3 முறை பதவி வகித்துள்ள பெர்லுஸ்கோனி கடந்த 2020 ஆம் ஆண்டு முதலாக மார்டா பெஸ்ஸினா என்ற பெண்ணுடன் டேட்டிங்கில் இருந்துள்ளார். அவர் உடல் நலக் குறைவால் கடந்த மாதம் 12 ஆம் தேதி தனது 86ஆவது வயதில் காலமானார்.

இந்த நிலையில் அவரது உயிலில் காதலிக்கும், தனது சகோதரர் மலோவிற்கும் தலா 100 மில்லியன் யூரோக்கள் மதிப்புள்ள சொத்துக்களை எழுதி வைத்துள்ளார். அவர் ஆரம்பித்த கட்சியில் இணைந்து அரசியலில் பிரவேசித்த மார்டா பெஸ்ஸினா, 2018 தேர்தலில் இத்தாலிய நாடாளுமன்றில் கீழவை உறுப்பினராகத் தெரிவாகியிருந்தார். அவர்களிருவரும் திருமணம் முடித்து சட்டரீதியாக இணையவில்லை எனினும், தனது மரணப்படுக்கையில் மார்டா பெஸ்ஸினாவை தனது மனைவி என்றே பெர்லுஸ்கோனி குறிப்பிட்டதாகத் தெரிகிறது.

பெர்லுஸ்கோனியின் மொத்தச் சொத்து மதிப்பு கிட்டத்தட்ட 6 பில்லியன் யூரோக்கள் என்று மதிப்பிடப்படுகிறது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.07.2023இல் வெளியிடப்பெற்றது.